# சிறுவர்களுக்கான வேத உபதேசம்

(வினா-விடை போதனைகள்)

சவறின் கிரேஸ் வெளியீடு

# சிறுவர்களுக்கான வேத உபதேசம்

**Sovereign Grace Publications**
**P O Box 62 159, Sylvia Park, Auckland, NZ**

மொழிபெயர்ப்பு:
**ஆர். பாலா**

நூல் வடிவமைப்பு:
M. ஜேம்ஸ்

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 11/14 வள்ளுவன்;
நூல்: 5.6" x 8.6"; பக்கங்கள்: 28

முதல் பதிப்பு: 2002
இரண்டாம் பதிப்பு: 2012

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9445671113

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9445671113

# முன்னுரை

சிறுவர்களுக்கான இந்த வேத உபதேச நூல் கிறேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபை வெளியிட்ட நூலின் தமிழாக்கமாகும். அதோடு புதிதாக ஒரு சில கேள்விகளை மட்டும் இணைத்துள்ளோம். சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பெரியாரும் திருச்சபை மக்கள் அனைவரும் வேதத்தில் நல்லறிவு கொண்டிருக்க வேண்டும் என்று பாடுபட்டனர். சிறுவர்களுக்கு வேதத்தைப் போதிப்பதில் அவர்கள் எப்போதும் அதிக சிரத்தை காட்டியுள்ளார்கள். மார்டின் லூத்தர் தன்னுடைய நூல்கள் அனைத்தும் அழிந்து போனாலும் தான் சிறுவர்களுக்காக எழுதிய வேத உபதேச நூல் மட்டும் அழியாமல் எக்காலத்திற்கும் பயன்பட வேண்டும் என்று விரும்பினார். மார்டின் லூத்தர் வினாவிடைப் பயிற்சி நூலுக்கு அளித்த முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. குடும்பங்கள் தோறும் சிறுவர்களுக்கு பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே சிறப்பான வேத போதனை அளிக்கப்பட்டு வந்தது. இன்றைய சிறுவர்களே நாளைய சபையை அலங்கரிக்கப்போகும் தலைவர்களும், ஆத்துமாக்களுமாவர். அவர்கள் இன்று வேத அறிவில் வளருவது மிக அவசியம். எனவேதான் உலகெங்குமுள்ள சீர்திருத்த சபைகள் இத்தகைய வேத அறிவை சிறுவர்களுக்கு அளித்து வருகின்றன, இந்நூலை திருச்சபைகள் ஞாயிறு பாடசாலைகளிலும், குடும்பத்தலைவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு வீட்டில் போதிக்கவும் பயன்படுத்திக்கொள்ளலாம். சிறுவர்கள் மனதில் நிற்கும்படியாக ஒவ்வொரு கேள்வி பதிலுக்கும் ஒரு வேத வசனம் இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய சிறுவர்களும், திருச்சபைகளும் வேத அறிவில் வளர இந்நூல் பயன்பட கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடி இதை வெளியிட்டுள்ளோம். இதை வெளியிட அனுமதி தந்த கிறேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபைக்கு எமது நன்றி.

**போதகர் பாலா**

# சிறுவர்களுக்கான வேத உபதேகம்

**கேள்வி 1:** உன்னைப் படைத்தது யார்?

**பதில்:** கடவுள் என்னைப் படைத்தார்.
(ஆதியாகமம் 1:27)

**கேள்வி 2:** வேறு எவற்றையெல்லாம் கடவுள் படைத்தார்?

**பதில்:** கடவுள் எல்லாவற்றையும் படைத்தார்.
(ஆதியாகமம் 1:1)

**கேள்வி 3:** கடவுள் ஏன் உங்களையும், எல்லாவற்றையும் படைத்தார்?

**பதில்:** அவருடைய மகிமைக்காக.
(ரோமர் 11:36)

**கேள்வி 4:** கடவுளை நீங்கள் எப்படி மகிமைப்படுத்த முடியும்?

**பதில்:** அவரில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளின்படி நடப்பதன் மூலம்.
(உபாகமம் 6:5, 6)

**கேள்வி 5:** கடவுளை நீங்கள் ஏன் மகிமைப்படுத்த வேண்டும்.

**பதில்:** அவர் என்னைப் படைத்துப் பராமரிப்பதால்.
(வெளிப்படுத்தல் 4:11)

**கேள்வி 6:** கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் என்று எங்கே படித்தீர்கள்?

**பதில்:** வேதத்தில் மட்டும். (சங்கீதம் 119:9)

**கேள்வி 7:** *வேதம் எதைப் போதிக்கின்றது?*

**பதில்:** *கடவுள் யார் என்றும் அவர் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் என்றும் வேதம் போதிக்கின்றது. (2 தீமோத்தேயு 3:16, 17)*

**கேள்வி 8:** *வேதத்தை எழுதியது யார்?*

**பதில்:** *பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்ட பரிசுத்தமான மனிதர்கள். (2 பேதுரு 1:21)*

**கேள்வி 9:** *கடவுள் யார்?*

**பதில்:** *கடவுள் ஆவியானவர். அவருக்கு மனிதர்களைப் போல் சரீரம் இல்லை. (யோவான் 4:24)*

**கேள்வி 10:** *ஒன்றுக்கு மேல் கடவுள்கள் உண்டா?*

**பதில்:** *இல்லை, ஒரே கடவுள் மட்டுமே இருக்கிறார். (ஏசாயா 44:6)*

**கேள்வி 11:** *இந்த ஒரே கடவுள் எத்தனை ஆட்களில் இருக்கிறார்?*

**பதில்:** *மூன்று ஆட்களில். (2 கொரிந்தியர் 13:14)*

**கேள்வி 12:** *அவர்கள் யார்?*

**பதில்:** *பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். (மத்தேயு 28:19)*

**கேள்வி 13:** *கடவுள் எங்கே இருக்கிறார்?*

**பதில்:** *கடவுள் எங்குமிருக்கிறார். (சங்கீதம் 139:7, 8)*

**கேள்வி 14:** *நீங்கள் கடவுளைக் காண முடியுமா?*

**பதில்:** *இல்லை, என்னால் கடவுளைக் காண முடியாது. ஆனால், அவர் எப்போதும் என்னைக் காண்கிறார். (யோவான் 1:18; எரேமியா 23:24)*